தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

திருவாரூரில் இன்று தொடங்குகிறார்!

தமிழ்நாடு முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இன்று (மார்ச் 31ஆம் தேதி) திருவாரூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், ஊரான திருவாரூரில் பரப்புரையை தொடங்குகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
31.03.2026 (செவ்வாய்க் கிழமை)		
மாலை 5 மணி	**திருவாரூர்** தெற்கு ரத வீதி (பொதுக்கூட்டம்)	திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி
01.04.2026 (புதன் கிழமை)		
காலை 9 மணி	**திருச்சி** உழவர் சந்தை (பொதுக்கூட்டம்)	திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர் திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர்
மாலை 5 மணி	**கரூர்** ராயனூர் (பொதுக்கூட்டம்)	அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை
02.04.2026 (வியாழக் கிழமை)		
காலை 9 மணி	**ஈரோடு** சித்தோடு (பொதுக்கூட்டம்)	பவானிசாகர், ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு கிழக்கு, பவானி
மாலை 5 மணி	**கோவை** கொடிசியா மைதானம் (பொதுக்கூட்டம்)	சூலூர், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு, சிங்காநல்லூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, வால்பாறை

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **தலைமைக் கழகம்,**
சென்னை - 18 தி.மு.க.
நாள் : 29.03.2026

வேலூர் மாவட்டம், காட்பாடி சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளரான கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கு காட்பாடி சித்தூர் பேருந்து நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், கேவி.குப்பம் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ராஜேஸ்வரி மோகன்காந்தி, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுவை நேற்று (30.03.2026) திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி சாலை தவ வளவனிடம் வழங்கினார். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி சோமு, தொழிலதிபர் ரவிச்சந்திரன் உட்பட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

'திராவிட மாடல்' அரசின் திட்டங்களையே

அ.தி.மு.க. காப்பியடித்துள்ளது!

கழக தேர்தல் அறிக்கைக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி, பேட்டி!

சென்னை, மார்ச் 31 – மகளிர் உரிமைத் தொகை சமூக நீதிக்கான முதலீடு என்றும், 'திராவிட மாடல்' அரசு தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களையே அ.தி.மு.க. காப்பியடித்திருப்பதாகவும் தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. தேர்தல் அறிக்கை குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துக்களைக் கேட்டு தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், 80 ஆயிரம் பேரிடம் கருத்துகளைப் பெற்றதாகவும் கூறினார்.

மேலும், நிறைவேற்றப்படக் கூடிய வாக்குறுதிகளையே தேர்தல் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளதாகவும், மகளிர் உரிமைத் தொகை சமூக நீதிக்கான முதலீடு என்றும் பெருமிதத்துடன் கூறினார்.

'திராவிட மாடல்' அரசு தற்போது செயல்படுத்தி வரும் திட்டங்களையே அ.தி.மு.க. காப்பியடித்திருப்பதாகவும் கனிமொழி கருணாநிதி குற்றம் சாட்டினார். சமூகநீதிக்கு எதிரானவர்கள், விடியல் பயணம் போன்ற திட்டங்களை எதிர்ப்பதாகவும் கனிமொழி கருணாநிதி தெரிவித்தார்.

தேர்தல் அறிக்கையில் இல்லாத பல திட்டங்களும் 'திராவிட மாடல்' அரசு செயல்படுத்தியுள்ளது. தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகள் விரைந்து நிறைவேற்றப்படும். இல்லத்தரசிகள் திட்டம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு நிறைவேற்றப்படும்.

கடந்த 2021 தேர்தலில் அளித்த 505 வாக்குறுதிகளில் 404 வாக்குறுதிகளை செயல்படுத்தியுள்ளதாகவும், 'திராவிட மாடல்' 2.0 ஆட்சி அமைந்ததும், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகள் விரைந்து நிறைவேற்றப்படும் என்றும் கனிமொழி கருணாநிதி கூறினார்.